# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண். 124/2024

வாதி தரப்பு 1ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. R.சத்தியவதி, -உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பெயர் : சரவணக்குமார் வா.சா.-1 தாலுகா :

த/பெ : தொழில் :

கிராமம் : வயது :

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை -23-02-2026

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன்.

20.07.2023 ம் தேதியிட்ட மேற்படி வழக்கின் வாதிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஏற்படுத்தி கொள்ளப்பட்டுள்ள வாடகை ஒப்பந்த பத்திரம் நகல் **வா.சா.ஆ.-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.(மேற்படி ஆவணம் நகல் குறியீடு செய்யஇயலாது என்ற பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது).

01.05.2024 ம் தேதியிட்ட வாதியின் பெயரில் செலுத்திய வாடகை ரசீது அசல் **வா.சா.ஆ.-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

19.07.2023 ம் தேதியிட்ட வாதியின் பெயரில் செலுத்திய அட்வான்ஸ் ரசீது அசல் **வா.சா.ஆ.-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

20.03.2024 ம் தேதியிட்ட வாதி கடைக்கு செலுத்திய மின்கட்டண ரசீது கணினி நகல் **வா.சா.ஆ.-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

25.11.2024 ம் தேதியிட்ட வாதி 1ம் பிரதிவாதியின் ஆதரவாளர்கள் மீது தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு இணையவழி வாயிலாக கொடுத்த புகார் மனு இரசீது கணினி நகல் **வா.சா.ஆ.-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

23.11.2024 ம் தேதியிட்ட வாதியின் கடைக்குள் நுழைந்து பிரதிவாதிகள் தரப்பு கற்களை கொட்டி வைத்துள்ளதை காட்டக்கூடிய புகைப்படம் மற்றும் குறுந்தகடு அசல் **வா.சா.ஆ.-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

25.11.2024 ம் தேதியிட்ட வாதியின் கடைக்குள் நுழைந்து பிரதிவாதிகள் தரப்பு கற்களை கொட்டி வைத்துள்ளதை காட்டகூடிய புகைப்படம், குறுந்தகடு தயாரித்தவர் கொடுத்த இரசீது அசல் **வா.சா.ஆ.-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

05.11.2024 ம் தேதியிட்ட வாதிக்கு 1ம் பிரதிவாதி அனுப்பிவைத்த அழைப்பாணை கடிதம் அசல் **வா.சா.ஆ.-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு.வி. ஒத்தி வைக்கப்படுகிறது.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.02.23 17:57:27 +0530